69

# மார்கழித்திங்கள் மலர்

ஜயவருஷம் 2014

ஸ்ரீ,த்ஜான வைரவேஸ்வரம்

# திருத்தல புராணம்

# அன்னை ஓர் ஆலயம்

இந்து தர்ம ஸாஸ்த்திரிகள்

பிரதமகுருஜீ

அன்பளிப்பு

ஸ்ரீ வித்ஜானிகர்

சிவாகம ஸாகரனுபூதி

## அன்பர்ஷர்மாஜி

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை



தாயிற் சிறந்த கோயிலுமில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஸ்வர்ணா கர்ஷண வைரவர்

1. *காயத்திரீ*

ஓம் பைரவாய வித்மஹே!

ஹரிஹரப் ரம் ஹாத்மகாய தீமஹி:

தந்ந: ஸ்வர்ணா கர்ஷண பைரவ: ப்ரசோதயாத் *(11 முறை)*

2. கீழ் வரும் பன்னிரு நாமாக்களால் பூஜிக்கின்றவர்களுக்கு ஸ்ரீ வைரவர் பொற் குவியலை அள்ளி அருள்வார் என பெரியோர் கூறுவர்.

*அந்தப் பன்னிரு நாமாக்கள்:*

ஓம் ஸ்வர்ணப்ரதாய நம:

ஓம் ஸ்வர்ண வர்ஷீ நம:

ஓம் ஸ்வர்ணாகர்ஷண பைரவ நம:

ஓம் பக்தப்ரிய நம:

ஓம் பக்த வச்ய நம:

ஓம் பக்தா பீஷ்ட பலப்ரத நம:

ஓம் ஸித்தித நம:

ஓம் கருணாமூர்த்தி நம:

ஓம் பக்தாபீஷ்ட ப்ரபூரக நம:

ஓம் நிதி ஸித்திப்ரத நம:

ஓம் ஸ்வர்ணா ஸித்தித நம:

ஓம் ரசஸித்தித நம: *(3 முறை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
ஸ்ரீ.த்ஜான வைரவேஸ்வரம்
திருத்தல புராணம்

அன்னை
தாயில் சிறந்த
ஓர்
ஆலயம்
கோயிலுமில்லை



தந்தை சொல்மிக்க மந்திரமில்லை

பிரதம
குருஜீ

அன்பர்
ஷர்மாஜீ



வாஸ்தவ
நிபுணர்

ஷர்மாஜீ

இந்துதர்ம
சிவாகம
சிவசித்தாந்த
அன்பளிப்பு
அன்பேசிவம்



ஸாஸ்திரிகள்
ஸாகரனுபூதி
பண்டிதர்
ஸ்ரீவித்ஜானிகர்
உபநிஷம்

ஸ்ரீ ஜய வருஷம்
அன்பே 2014 சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிவமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டவைரவர்



சிவனின் வீரச் செயல்கள் எட்டு என்று நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. வீரச் செயல்களில் வெளிப்பாடாக விளங்கும் வைரவரும் எட்டு உருவங்களும் தாங்கி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

## வைரவரின் எட்டுத் திருமேனிகள்

உன்மத்தன், பீஷ்ணன், சம்ஹாரன், கரோதன், கபாலன், சண்டன், அஜி தாங்கன், ருரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்மத்தபைரவர்



பொன் வண்ண நிறத்தையுடையவர் ஏர், கத்தி, கபாலம் ஆகியவற்றை ஏந்திய வாராகி தேவியுடன், குதிரை வாகனத்தில் மேற்கு திசையின் காவல் தெய்வமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்ஹார பைரவர்




வெண்மையான நிறத்தையுடைய இவர் சூலம், டமருகம், சங்கு சக்கரம், கதை, கத்தி, கபாலம், குறுவாள், பாசம், அங்குசம் முதலிய பத்து ஆயுதங்களை பத்து கரங்களில் ஏந்தி, சண்டிகா தேவியுடன் நாய் மீது வடகிழக்கு காவல் தெய்வமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீஷண பைரவர்



சிவப்பு நிறத்தையுடைய இவர், சூலம், உலக்கை, கத்தி, கபாலம் ஏந்தி, பூத, வேதாளங்கள் சூழ, பைரவியான சாமுண்டியுடன் சிங்க வாகனத்தில் வடதிசை காவல் தெய்வமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜிதாங்க பைரவர்




கருநீல நிறத்தையுடையவர். அட்சமாலை, கெண்டி, கமண்டலம், கத்தி ஏந்தி பிராம்மி தேவியுடன் அன்னவாகனத்தில் இருக்கிறார். சில சமயம் இவர் நான்கு முகங்கள் கொண்டவராகவும் காட்சி தருகிறார். இவருக்குரிய திசை கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருரு பைரவர்



மான், மழு, கத்தி, கபாலம் ஆகியவற்றை ஏந்தி இடபவாகனத்தில் மாகேஸ்வரியுடன் தென் கிழக்கு திசையில் வீற்றிருக்கிறார்.

அஷ்டபைரவர்கள் கடுமையான தோற்றமுடையவர்கள் என்றாலும் பக்தர்களுக்கு அநேக வரங்களை அள்ளித்தரும் கிருபா மூர்த்திகள் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் வழங்கி இன்பம் தருபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சண்ட பைரவர்



பொன் நிறம் கொண்டவர். சக்தி குலிசம், கத்தி, கபாலம் ஏந்தியவராக மயில் வாகனத்தில் கௌமாரியுடன் தென் திசைக்கு காவலாக எழுந்தருளியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்ரோதன பைரவர்




கறுப்பு நிறத்தையுடையவர். சங்கு, சக்கரம், பானபாத்திரம், தண்டம் ஆகியவற்றை ஏந்தி, வைஷ்ணவியுடன், கருட வாகனத்தில் தென்மேற்குத் திசை காவல் தெய்வமாகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபால பைரவர்



பத்மராக வண்ணத்தையுடையவர். மேற்கரங்களில் இரண்டு இடியை உணர்த்தும் வஜ்ஜிரங்களையும் இந்திர நீலக் கற்களான அணி அணிந்து, ஐந்தரியுடன் ஐராவதத்தில் கிழக்கு திசையில் பவனிவந்து காவல் புரிகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவரை போற்றும் புராணங்கள்

## 1. திருவாடுதுறைப் புராணம்

காலன் மார்பிற்க கான்மலர் நீட்டிய
சீலன் கோயிற் திறமிகழந் தோர்களைச்
சூலமேற்றுஞ் சுழல் விழிச் சேத்திர
பாலன் பொற்பதம் பற்றிப் பணிகுவோம்

காலன் மார்பு முறியும் வண்ணம் த்ன் மலர் போன்ற காலால் எட்டி உதைத்த சிவன் கோவில்களின் மகிமையை இகழ்ந்தோர்களைச் சூலத்தால் குத்தும் சுழல்விழி கொண்ட வைரவக் கடவுளின் பொற்பாதங்களைப் பற்றிப் பணிவோம்.

## 2. கந்த புராணம்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒரு தலை கிள்ளியே யொழிந்த வாணவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்

தாமரையை ஆசனமாகக் கொண்ட பிரம்மா சிவபெருமானை ஒரு சமயம் மதித்திடாத போது அவரது ஐந்து தலைகளுள் ஒன்றைக் கிள்ளி எறிந்தும், ஏனைய தேவர்களது உதிரத்தையும், கர்வத்தையும் வாங்கிக் கொண்டு அவர்களுக்குத் தண்டனை அளித்தும் அருள் தரும் வடுகக் கடவுளாம் வைரவரைப் போற்றித் துதிப்போம்.

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமேனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள் பொற்கழல் களேத்துவாம்.

பெருஞ்சினம் கொண்ட பரியழன் மீது போர்த்துக் கொண்டுள்ள கருமையான பகை போன்றும், ஆலாலத்தைப் போன்றும், செஞ்சுடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல ஒளி நிரம்பிய திருவுடலின் மீது சிறப்பாக அமைந்த நீலநிறம் கொண்ட ஆடை தரித்துள்ள வைரவக் கடவுளின் பொன்னான பாதங்களைப் பணிவோம்.

## 3. திருச்செந்தூர் புராணம்

கிஞ்சு கந்தரு வாய்கலைக் கிள்ளையா
ஞஞ்சு கம்மிலோன் றற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்திறக்
கஞ்சு கன்பொற் கழலினை போற்றுவம்

சொன்னதைச் சொல்லும் கிளியைப் போல வேதமந்திரங்களை ஒப்புவிக்கும் பிரம்ம தேவனுடைய ஐந்து முகங்களில் ஒன்றைக் கிள்ளி அகற்றிய, கார் மேகத்தினைவிட அதிகக் கருமை நிறம் கொண்ட யானையின் தோலினை அணிகின்ற வைரவ மூர்த்தியின் பொற்பாதங்களைப் போற்றிப் பணிவோம்.

## 4. மருதவனப் புராணம்

மேலையோர் கற்பத் திருதியிற் கதிர்கண
மேவுடுக் கணங்கள் கீழுறத்தீம்
பாலையொத் திரு சங்கீன்ற முத்தினங்கள்
பரந்திடப் புவியிடத் தெழுந்த
வேலையின் மிதந்த புகலியத் தோணி
விளங்கிடு வடுகனார் கடவுள்
காலை மென் போதை யுச்சியிற் கொள்வாங்
கடுந்துயர் மாலை தீர்ந்திடவே

ஒளி வீசிடும் நட்சத்திரக் கூட்டங்கள், ஒரு கற்பகால இறுதியில் கீழே உதிர்ந்தாற் போல, பால் போன்ற நிறமுடைய சங்குகள் தரும் முத்துக்கள் பரவ பூமியைச் சுற்றி எழுந்த கடலில் மிதந்த சீர்காழியிலுள்ள தோணிபுரம் என விளங்கிடும் வடுகநாதனாம் வைரவக் கடவுளின் பாதங்களை, கடுமையான துயரங்களெல்லாம் தீரவேண்டும் என வேண்டிப் பற்றிக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. காசி

தளம் பொலி மலரோ ஜாதி வானவர் தாழ்ந்து போற்ற
வுளம்பொலி காசிமேவு முயிர்கள் செய்பாவ மெல்லாங்
களம் பொலியாது தண்டங் கணடறலொழித்து முத்தி
வளம் பொலிவகை செய்கால வயிரவற்கன்பு செய்வோம்

தாமரையில் வீற்றிருக்கும் பிரம்மனும், தேவர்களும் தாழ்ந்து போற்ற உள்ளம் மகிழும், காசியில் வாழும் உயிர்கள் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் தண்டனை அளிக்காது, முத்தி அடையச் செய்கின்ற வைரவ மூர்த்தியைப் அன்புடன் பணிவோம்.

## 6. பழைய காஞ்சிப் புராணம்

கொச்சையறி வுற்பமாங் கொள்கையினா லரிபிரமர் கூடி வீணின்
மெய்ச்சமரம் புரிந்திகலி யொருவரொருவரை மிகவும் வெறுக்கு நாளி
லச்சுறவுற் றவரகந்தை விடுமாறு நெரக்கி யினிதருளே செய்யுங்
கச்சிவடு கக்கடவுண் முச்சிகை வேற்படையினையே கருதி வாழ்வாம்

யார் பெரியவர் என்று அகந்தையினால் சண்டை புரிந்து, பிரம்மா அன்னமாகவும், விஷ்ணு பன்றியாகவும் அஃறினை உயிரினமாக மாறி பகைத்துக் கொண்டார்கள். இவர்களது அகந்தையை விடுமாறு செய்து இனிதே அருளிய காஞ்சியின் வடுகக் கடவுளாம் வைரவரின் மூன்று சிகை கொண்ட வேற்படையினை வாழ்த்துவோம்.

## 7. காஞ்சிப் புராணம்

எளியரை வலியர் வாட்டின் வலியரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டுமெனு முரைக் கமைய வன்றே
தெளியுமா வலியைச் சொற்றோச் செகுதுரியக் கவயம்
வளியுளர் கச்சி காவல் வயிரவர்க் கன்பு செய்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளியோரை வலியவர்கள் வருத்தினால், வலியோர்களை கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள இறைவன் வருத்துவான் என்ற உண்மைக்கிணங்க, மூன்றடி நிலம் கேட்ட வாமனன், மூன்றாவது அடியாக மாவலியின் தலைமேல் காலைத் தூக்க வாமனனை அழித்து அவன் தோலைக் கவசமாகப் போர்த்துக் கொண்ட காஞ்சிக் காவலரான வைரவர்க்கு அன்பு செய்வோம்.

## 8. கடம்பர் கோயிற் புராணம்

கயிரவ நான்மலர்க் கவின்க ணார்மயற்
செயிரவ நாடொறு மியற்றி யேதிரி
யுயிரவ நானென வொறாது காத்தருள்
வயிரவ நாதனை வணங்கி வாழ்த்துவோம்

ஆம்பல் மலரைப் போன்ற அழகான கண்களையுடைய மாதர்களின் மனதில் நான், எனது என்னும் நோயை தினமும் உண்டாக்கி அலைய விடாது காத்தருள் புரிகின்ற வைரவ நாதனை வணங்கி வாழ்த்துவோம்.

## 9. கடம்பவனப் புராணம்

கருதரிய வளிதைபர னெற்றி யிற்றோன்றிச் கபாலமேந்தி
வருபிரள யஞ்சுவற்றிப் பயிரவனாயண்டத்து வங்கண் மாற்றி
யரிசுரும்கஞ்சுகியாய்வேதவெகி னூர்த்து முன்போலவுண்டாக்கி
யிருமைபெறக் காத்தருளுங் சேத்திர பாலன் றிருத்தா ளேத்தல்
செய்வோம்

பரமேஸ்வரியின் கணவரான பரமசிவனின் நெற்றியில் தோன்றிச் சூலத்துடன், பிரம்ம தேவனுடைய கபாலத்தையும் ஏந்தி, வைரவர் என்ற பெயருடன் உலகத் தத்துவங்களை மாற்றி,. நரசிங்க மூர்த்தியின் உடலைக் கிழித்து அவர் தோலை ஆடையாக்கி அணிந்து, உயிர்களெல்லாம் இருமை பெறக் காத்தருளும் சேத்திர பாலனாம் வைரவரின் திருத்தாளை பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. புலியூர்ப் புராணம்

விதிப் பால வினைதவிர்க்கும் வியாக்கிரமா புரத்தினிது
மேவினோர்கள்
மதிப்பாவிற் செய்வினைக்கு மூவிலை வேற் சூலத்தின்
மருவ வைத்தே
யுதிப பாலன்னைர் முலைகண் மீட்டருந்தா வகை முத்தி யுவுந்
தில்லைம்
பதிப்பால வயிரவன்றன் பாதசரோ தகங்கறென் றுபரவி
வாழ்வாம்

விதியினால் ஏற்பட்ட முந்தைய வினைகள் தவிர்க்கும் புலியூரிலே வாழ்கின்றவர்களுக்கு, மூன்று இதழ் கொண்ட வேல்ச் சூலத்தால், அவர்களை மதிப்பில்லாமல் துன்புறுத்தும் செய்வினைகளை அடக்கி, மறுபடியும் அன்னை மடியில் பிறந்து முலைப்பாலை அருந்தா வண்ணம் முத்தி தந்து அருளும் தில்லையம்பலப் பதியின் பாலனாம் வைரவரின் பாதங்களை என்றென்றும் பற்றிப் போற்றி வாழ்வோம்.

## 11. அவிநாசிப் புராணம்

அஞ்சுகனை யாதிலகு மாடவரக்
கங்கணனை யகலும் வானில்
விஞ்சுகனை மாரிநிகர் மேனியனை
வாசியென விரைந்து தாவும்
பைஞ்சுகனை யேயெரித்த புக்கொளியா
ரெயில்காவல் பாரிக்கும் வீரக்
கஞ்சுகனை வேணிமலர்க் கிஞ்சுகனைப்
பரசுகனைக் கழறல் செய்வாம்

எழிலானவனை, சுகம் குறையாது விளங்கியாடும் சர்ப்ப ஆபரணனை, ஆகாயத்தில் மிகுந்த மாரி போன்ற மேனி கொண்டவனை, விரைவாக அம்புகளைத் தொடுத்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதனையே எரித்த பரமசிவனின் எல்லையைக் காவல் காக்கும் வீர வைரவனை சிவந்த கொன்றை மலர் அணிந்த சடாதரனாகிய பரமனின் பாதங்களை பணிந்து துதிப்போம்.

## 12. பவானி கூடற் புராணம்

பொருதலை யுகளும் வேணிப் புனிதனே பரமென்று ள்ளங்
கருதலை யயனி யென்னக் குடிலையுங் கழலத் தேறி
வொருதலை யுகிராற் கிள்ளியும் பர்மா லுதிரம் வாங்கும்
விரிதலை சூலச்செங்கை விமலனை வணக்கஞ் செய்வாம்

பிரம்மதேவன் ஐந்து முகம் கொண்டிருந்த காலத்தில் தன்னை மகேஸ்வரன் என்று பாவித்து அகந்தை கொண்ட காரணத்தாலும் பிரணவ மந்திரத்திற்கு அர்த்தம் கூறாததாலும் அகந்தை யுடையவன், பிரணவத்திற்கு அர்த்தம் தெரியாதவன் நீ என்று ஒரு தலையைக் கிள்ளி எறிந்தவனை, திருமாலின் குருதியை வாங்கியவனை, விரிந்த தலைகளையுடைய சூலாயுதத்தை சிவந்த கையில் ஏந்திய விமலனை வணங்கித் துதிப்போம்.

## 13. தனியூர்ப் புராணம்

மறைபுகழ்தானே யொம்ப வயங்கு கேத்திரத்தி னெல்லை
பொறையுடல் விடுத்தோர் பாவப் புணர்ப்பினுக் கேற்ற தண்டங்
குறையற வியற்று தண்டதரன் குறுகாது தானே
முறையுற வுஒற்றிப் போக்கு முதல்வனை வணக்கம் செய்வாம்

வேதங்கள் புகழ்ந்து கொண்டாடக் கூடிய மகேஸ்வரனின் கோவில் எல்லை அருகில் உடலை விட்டோர் பாவங்களுக்கேற்ப தண்டனையைக் குறைபடாது நிறைவேற்றும் எமன் அணுகாதவண்ணம் தானே முறையாக ஒப்பேற்றும் முதல்வனாம் வைரவனை வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. விளத்தொட்டிப் புராணம்

இருட்பெரு நிரய மேவற்கேதுவாஞ் செருக்குமேவில்
வெருட்பெருந் தண்டமேவு மிகவுமென்றுணர்த்தி யாங்கு
மிருட் பெருஞ் செயலி னீங்கா மாலுடம் புரித்துப்போர்த்த
வருட்பெரு வடுகண் செம்பொனப்புயப் பாதம் போற்றி

கர்வம் அடைந்தால், இருள் சூழ்ந்திருக்கும் நரகத்தை அடைந்து கொடூரமான தண்டனைக்கு ஆளாக வேண்டுமென்று உணர்த்தி, மயக்கத்தைத் தருகின்ற கொடும் செயல் விட்டு நீங்காத உக்கிரமடைந்த நரசிங்க மூர்த்தியைப் பிளந்து தோலை உரித்துப் போர்த்திய அருள் புரியும் வடுகக் கடவுளாம் வைரவநாதனின் சிவந்த பொற் பாதங்களைப் போற்றுவோம்.

## 15. கோயிலூர்ப் புராணம்

தெருட்பெரு நலன் வாவித் தீவிர தரத்துற் றோர்க்கு
மருட்பெரு மாயை நறி வல்லினைப் படலங்கீறிச்
சுருட்பெருங் கொடிய துக்க நிவர்த்தியுங் சுகத்தின்சேறு
மருட்பெருஞ் செயலானல்கும் வடுகனையடைந்து வாழ்வோம்

தெளிந்த பேரின்பத்தை விரும்பி தீவிரமாக துதித்தோர்க்கு பெரும் மாயை அழித்து, வல்வினை படலம் கீறி சுருள் பெரும் துக்க நிவர்த்தியும், முக்திப்பேறும் தன் அருட் செயலால் அருள் புரியும் வடுக நாதனாம் வைரவனை அடைந்து வாழ்வோம்.

## 16. திருக்குறுக்கை புராணம்

ஆக்கும் வினை மலர வனதன் நென்றற
கவனுத் தமாங்க நான்தங்
காக்கும் வினைமாய வனதன் றென்றற
கவன் மேனி கழிநெய் தோறும்
தாக்கும் வினையாள ருந்தேர் சான்றுரைக்கக்
கூர்கொளு கிர்ச்சாங்கத் தோடு
போக்கும் வினைச்சூற் படையுபாங்க முங்கொள்
வடுகனடி போற்றி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்புத் தொழில் என்பது பிரம்மனுக்குச் சொந்தம் ஆனதல்லவென்று அவனுக்குணர்த்த நான்கு முகமும், பாதுகாக்கும் தொழில் விஷ்ணுவினுடையது அல்ல என்பதை உணர்த்த அவனுடைய குருதி ஒழுகும் உடலும், தாழ்ந்த சிறு தொண்டரும் அறிந்து சான்றுரைக்க விளக்கும் கூரிய நகங்களோடு உயிரைப் போக்கக்கூடிய சூலாயுதம் ஏந்திய கையும் கொண்ட வடுகநாதனாம் வைரவரின் பாதங்களைப் போற்றி வாழ்வோம்.

## 17. திருவானைக்காப் புராணம்

உலக மளித்தல் சுதந்திர மன்றுவண
முயர்த்தோர் கௌவ வன்சே
யிலகு முருவம் பொடித்த வன்பா
லெழுந்து படைப்புஞ் சுதந்தரமன்
றலர்மெல் வணையாற் கெனவவனை
யரங்கத் திசை மாமு கனாக்கிப்
பலரும் வெருவப் பொழி நெய்த் தோர் பயிக்கம்
புகுந்தோம் பதம் பணிவோம்

மகாவிஷ்ணுவிற்கு உலகம் அளித்து பாதுகாப்பது என்பது சுதந்திரமானதல்ல என்று கூற உருவத்தைப் பொடித்து உயிர்களைப் படைப்பதும் பிரம்மனுக்கு சுதந்திரமானதல்ல என்று கூற பிரம்மன் சிரம் அழிய நான்கு முகமுடையவனாக்கி பலரும் அஞ்ச குருதியில் பிச்சை எடுத்தவனாகிய வைரவநாதனின் பாதம் பணிவோம்.

## 18. திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

தருணமலர்க் கோயிலிறை யுச்சிமுடிக்
கபாலத்தைத் தளிர்க்கை யேந்தி
யருணநீர் பலிக்கிமை யோர் நடுங்கவலம்
வந்து மாற்காவி நல்கி
மருணனிசெய் மூவிலை வேண் மணி நாக
முடுக்கையி வை வயங்க வேந்திக்
கருணைமறம் பூண்டெழில் செய்கடைஞாழல்
வயிரவரைக் கருதி வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமரை மலரில் வாழுகின்ற பிரம்மனுடைய உச்சிமுடியுடன் கூடிய கபாலத்தை தளிர்க் கையில் ஏந்திக்கொண்டு தேவர்கள் பயந்து நடுங்க வலம் வந்து சூரியோதப் பலி பிச்சை எடுத்து திருமாலுக்கு ஆவி கொடுத்து, மயங்கிய போரை வெல்லத் தக்க மூவிலை கொண்ட சூலமும் மறையையுடைய நாகமும், உடுக்கையும் கையிலேந்தி கருணைமறம் பூண்டு கொன்றை மலர் அணியும் வைரவரைக் கருத்தில் கொண்டு வாழ்வோம்.

## 9. சீர்காழிப் புராணம்

*துங்க மாமணித் தூணில்வந் திரணியன் றோள் வலிதனை வாங்கஞ்*
*சிங்கு வேற்றுரி யரைக்கசைத்து லகெலாஞ் தேர்ந்தளர்தவன் மேனி*
*யங்கம் யாவுமோர் கதையதாகக் கொண்டத ளங்கியாப் புனைதாழிச்*
*சங்க வார்குழைச் சட்டை நாயகன்றுணைத் தாமரைச் சரண் போற்றி.*

நவரத்தினம் பதித்த தூணைப் பிளந்து கொண்டு வந்து, இரணியன் வயிற்றைக் கிழித்து அவன் தோள்வலி வாங்கும் நரசிங்க மூர்த்தியை கொன்று அவர் தோலை இடுப்புக்கு ஆடையாக அணிந்தும், ஈரடியாலே மூவுலகையும் அளந்த வாமனன் மேனியின் அங்கங்களை ஓர் கதாயுதமாகக் கொண்டு தோலை ஆடையாக உடுத்தும், சீர்காழிச் சங்கை கலச குண்டலமாக அணிந்தும் இருக்கின்ற சட்டை நாயகருடைய தாமரை போன்ற பாதங்களைப் போற்றுகின்றோம்.

## 20. திருப்பூவணப் புராணம்

அரிபிரம ரகந்தை கெட வண்டங்க
　ளுடைத் தெரியு மங்கில் கோட்பட்
டுரியபல் வுலகமெலா மொழிந்திடுநா
　ளவர்கடம துடன் மேற் கொண்டு
குருதியாய் கொப்புளிக்குங் கரயின்மூ
　விலைச் சூலங் கொண்ட திண்டோட
கருவரைநேர் திருவடுகக் கடவுளைமைப்
　புரப்பக் கை கூப்புவோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மா, விஷ்ணு ஆகியோரின் அகந்தை கெட்டு ஒழியும் வண்ணம் வானெல்லாம் பற்றி எரிய அக்கினி வீசப்பட்டு சுதந்திரமான பல உலகங்களும் ஒழிந்திடும் காலத்தில் அவர்கள் மேல் பாய்ந்து குருதி கொப்பளிக்க வைக்கும் வேலும், மூவிலைச் சூலமும், திண்மையான தோள்களும் கொண்ட வடுகக் கடவுளாம் வைரவர் எம்மைக் காத்தருள வேண்டும் என்று கை கூப்பித் தொழுவோம்.

## 21. திருநெல்வேலி புராணம்

பகருமறைப் பனைவனத்திற் பண்டிருந்த தாபதர்க
ணிகரிலவர் தவமெனவே நெறியிலவர் செயும் வேள்விப்
புகர் முகவெங் கரியுரித்த புரிசடையோ நெல்வேலி
நகரினிது புரந்த சட்டை நாதனிரு பதம் பணிவோம்

வேதாரண்யம் என்று கூறப்படுகின்ற இடத்தில் குடியிருந்த சைன முனிவர்கள் தவமற்றதை தவமென்று நெறியில்லாமல் செய்யும் யாகத்தில் யானையின் தோலை உரித்து ஆடையாக அணிந்த சடை முடியுடைய சிவனின் திருநெல்வேலியுள்ள தலத்தை இனிதே காத்திடும் சட்டை நாதனாம் வைரவக் கடவுளின் இரு பாதங்களையும் பற்றிப் பணிவோம்.

## 22. ஆதித்தகிரிப் புராணம்

பரநாத வைரமணிகிண் கிணியொலிப்பட்
படமெடுத்துப் பார்க்குந் துத்தி
வரநாக கங்கணந்தான் மாலகந்தை
யிருளகற்ற வந்த ஜோதி
யுரணாரும் வித்ருமச் செஞ்சடைய
னருளத்தி யுயரா தித்த
புரமேவு மணிவரை வாழ் சட்டை நா
யகன் மலர்ந்தாள் போற்றி வாழ்வாம

பாதங்களில் வைரமணிச் சிலம்பு கிண்கிணியாக ஒலிக்க, கைகளில் படமெடுத்தாடும் நாகம் கங்கணமாக திகழ திருமாலின் அகந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும இருளை அகற்ற வந்த பரம்சோதி மார்பினில் அணிகின்ற பவளம் போன்ற செஞ்சடைக் கடவுளின் அருளாயுடைய கங்கையின் வளம் பெருகும் ஆதித்தபுரத்தில் உள்ள திருக்கோவிலில் வாழும் சட்டை நாதனாம் வைரவனின் மலர் போன்ற பாதங்களைப் போற்றி வாழ்வோம்.

## 23.மருதூரர்ப் புராணம்

கோணிலவு பிறைபொருவுங் கூரெயிற்று
  வாய்மூடு வற் குதிரை யானைப்
பாணியிற்கங் கணம் புனைந்தவுரகமணி
  வெயில் விரிக்கும் பண்பினானை
வேணியரன் றிருக் கோயில் காப்பானை
  நிருவாண வேடத்தானை
வானிலவு முத்தலை நேல் வடுகணைச் செந்
  தமிழ்பாடி வணக்கஞ் செய்வாம்

கோணலான வளைந்த மூன்றாம் பிறைச் சந்திரனைப் போல கூர்மையான வக்கிரமான தந்தமுள்ள நாயை, குதிரை, யானை போல வாகனமாய்க் கொண்டவனை, கையில் கங்கணமாய் அணிந்த அரவத்தின் மாணிக்கம் வெய்யில் போல ஒளி வீசக் கூடியவனான மகேஸ்வரனின் திருக்கோவிலைக் காப்பவனை, நிர்வாண வேடம் பூண்டவனை, வாழ்ந்து நிலை பெறும் முத்தலை வேல் வடுகனை, செந்தமிழால் பாடி வணக்கம் செய்வோம்.

## 24.திருவோத்தூர் புராணம்

மூவரிமலர்ப் பண்ணவன்றன் சிரமொன்றை
  நகநுதியால் வீட்டியுற்ற
சோரிமலர் தலைநிலத்திற் பாயாசச்
  சிரத்தேற்றுத் தொடர்ந்து போந்து
வாரிமலர் கண்வளர்மா னெற்றி யெற்றிக்
  குருதிகொடு மமதை நீக்குங்
காரிமலர்க் கழலிரண்டுங் கரமிரண்டுங்
  கூப்பி நிதம் கருதி வாழ்வாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தாமரையில் ஆசனம் கொள்ளும் பிரம்மாவின் சிரங்களுள் ஒன்றை நகநுனியால்க் கிள்ளி, இரத்தம் ஒழுகும் தலை நிலத்தில் விழாத வண்ணம் பிடித்துக்கொண்டு தொடர்ந்து சென்று சமுத்திரத்தில் பள்ளி கொள்ளும் திருமாலின் நெற்றிக்கு இலக்காக மோதி குருதியை எடுத்து அகந்தையை நீக்கும் வைரவருடைய கரிய மலர் போன்ற பாதங்கள் இரண்டையும் இருகரங்கள் கூப்பி தினமும் அவனையே நினைத்து வாழ்வோம்

## 25.திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

புயற் காரின் வருமகவான் பணிவள்ளல
  பணிவிடைகள் பொருத்தி நாளுந்
செயற்காக வெங்கள் குலத்தனை
  யடிமை கொண்டு வளர் தேவதேவ
னயற் காதியமலனருள் செய்தபுர
  மெனவுலக மனைத்துங் கூறும்
வயற்காழி நகர்ச்சட்டை நாதனிரு
  பதமலரை வணங்கி வாழ்வாம்.

மேகத்தின் நாயகன் இந்திரன் பணிந்திடும் வள்ளலான மகேந்திரனுக்கு தினமும் பணிவிடைகள் செய்வதற்காக தம்முடைய குலத்தை அடிமையாக் கொண்டு வளரும் தேவ தேவனுக்கும், பிரம்மா, தேவாதி தேவர் முதலானவர்களுக்கும், வரமெல்லாம் கொடுக்கும் மகேந்திரன் அருள் செய்த தலமென்று உலகம் அனைத்தும் கூறும் சீர்காழி நகரிலுள்ள சட்டைநாதனாம் வைரவரின் மலர் போன்ற பாதங்களை வணங்கி வாழ்வோம்.

## 26.திருநாகைக் காரோணப் புராணம்

பெருகுதன் புகழுளேனார் பிரதாப மடக்கியாங்கு
முருகுதங்கலரின் மேலாண் முண்ட வெண்க பாலத்தாடு
கருகுபைங் கொண்டன் மேனி கவிழ்ந்திடு செந் நீரற்ற
திருகுநீர் வடுகப் புத்தேள் சேவடி சென்னி சேர்ப்பாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுடைய புகழையெல்லாம் தன்னுடைய பிரதாபத்தினால் அடக்கி தாமரை ஆசனத்தில் அமரும் பிரம்மனுடைய முண்டமற்ற வெண்மையான கபால ஓட்டில் கருகிய நீலமேக சரீரம் கவிழ்த்தது போல, சிவந்த இரத்தம் கொண்ட கள்ளமில்லாத வடுகக் கடவுளாம் வைரவரின் திருவடிகளை சிரமேற் கொள்வோம்.

## 27.திருக்குடந்தைப் புராணம்

ஏழுவகைத் தாதுங் கூடினியங்கிடு முயிரொன்றேனு
நழுவிடி னியங்கா வென்று நவிறலை வெளி செய்தாங்கு
முழுவலி நெடியோ னாதி மொய்த்த வானவர் மெய் நெய்த்தோர்
வழுவறக் கபாலத் தேற்ற வடுகனை வணங்கி வாழ்வாம்.

ஏழுவகைத் தாதுக்களான, இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோள், நரம்பு ஆகியவை சேர்ந்துதான் உயிர்கள் வாழ முடியும். அப்படி இல்லாமல் ஏதாவது ஒன்றேனும் குறைந்தாலும் உடம்பால் இயங்க முடியாதென்று கூறுவதைப் பிரசித்தப்படுத்தி, முழுவலிமை அடைய மகாவிஷ்ணு முதலான வானவர் கூட்டத்தின் தேக இரத்தத்தை குற்றமற்ற பிரம்ம கபாலத்தில் ஏந்திய வடுகநாதனை வணங்கி வாழ்வோம்.

## 28.மாயூரப் புராணம்

ஓங்குநாற் படைமுன் னஞ்சு மொள்ளுகிர் படையுந்தேசு
வீங்குசக் கரமுன்னான வெம்படை யஞ்சு மஞ்சுந்
தாங்கு சூற்படையுங்கொண்டெ தலைக்க நேத்தோவேற்ற
பாங்குசேர் வடுகப்புத்தேள் பதமலர்க் கன்பு செய்வாம்

தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முதலான உயர்ந்த நான்கு படைகளும் அஞ்சத்தக்க நகக்கூர்மையும், அழகிய சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதை முதலான ஐம்படையும் அஞ்சக்கூடிய சூலாயுதப்படையை ஏந்திக் கொண்டு பிரம்ம கபாலத்தில் இரத்தம் கொட்டிப் பாய்ச்சும் பாங்குசேர் வடுக நாதக் கடவுளின் பாதமலருக்கு அன்பு செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. உறையூர் புராணம்

உலக மூன்றினுக்குந் தானே பொருளுமுதலென் றெரிந்தாங்

கலகற்ற பொறிகுழும்பி யிலங்குமுத் தலைவேலேந்தி

வலனுடை மயனாதி வானவர் செருக்கு மாறப்

பலருமுன் னஞ்ச நெயத்தோர் பலிகொண்டோன் சரணம் சார்வாம்

மூன்று உலகங்களுக்கும் தானே ஒரு முதல்வன் எனத் தெரிவித்துக், கையில் அளவற்ற தீப்பொறிகள் பிரகாசிக்கும் முத்தலை வேலதாங்கி, வலம்புரிச் சங்கேந்திய மாயவன், வானோர் போன்றோரின் அகந்தை அழிய, பலரும் அஞ்ச இரத்தப்பலியை ஏற்ற வைரவக் கடவுளின் பாதங்களைச் சரணடைவோம்.

## 30. திருவம்பர்ப் புராணம்



சுவை முனைந் தெரிந்து பின் [illegible]

தூத்தவ வேட்டுவர் பொ[illegible]

செவை [illegible]ன் றனை [illegible]

தெரிந்து [illegible]

நவை கொ[illegible]

நயந்துபி [illegible]

சுவைபடு திற[illegible]

கடவுடன் [illegible] போற்[illegible]

உணவின் சுவைதனை [illegible]றிந்து பின்னர் இறைவனுக்களித்த [illegible]யனாரைப் போல், செந்தாமரையனாகி[illegible] சுவையை முன்னே உணர்ந்ததால், பின்[illegible]நகமும் திருமாலின் இரத்தத்தை சுவைத்து [illegible]னிமேல் அத்தகைய சமயம் வாய்க்காது என்று எல்லா வெற்றிக்கும் காரணமான வெற்றியுடைய [illegible]த்தைக் கை[illegible]கொண்ட வைரவக் கடவுளின் திரு[illegible]களைப் போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. திருவாளொளிப் புற்றூர்ப் புராணம்

மறைமகழ் கபாலத் தோடு மாயவற் மேனி நெய்த்தோர்
துறைகமழ் கொடிய வெந்தீச சூலமுங் கரத்திற் றாங்கி
முறைகம முலகில் யார்க்குமுடிய பெருக்கு மாய்க்கு
மிறைகமழ் வடுகப் புத்தெளினையடிக் கன்பு செய்வாம்.

பிரம்மதேவனின் கபாலத்தில் மாயவனின் இரத்தத்தையும் தாங்கி, அதனுடன் வெந்தீச் சூலமும் கரத்தில் கொண்டு, உலகில் யார் யாருக்கு அகந்தை உண்டாகுமோ அவற்றை அழிக்கும் தெய்வமான வடுகப் பெருமானாம் வைரவரின் பாதங்களைப் பணிந்து அன்பு செய்வோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்மத்த பைரவர் மந்திரம்

ஓம் ஹ்ரீம் அங்க் – க்லிம் உன்மத்தானத்த பைரவ
சர்வ சத்ரு நாசய குரு குரு ஸ்வாஹா ! *(11 முறை)*

(தீவிரமான மனநோய்கள், சித்தபிரமை நீங்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண பைரவ அஷ்டகம்

(ஸ்ரீ துர்க்கைச் சித்தர் அருளியது)

துர்க்கைச் சித்தர் அருளிய இந்த அஷ்டகம், கைமேல் பலன் தரக்கூடியது. அவர்தாள் பணிந்து, இந்த துதியை உங்களுக்கு வழங்குகிறோம்.

பண் – நாதநாமகிரியை

தனந்தரும் வயிரவன் தளிரடி பணிந்திடின்
தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந் திறந் தவன்பதம் மலரிட்டு வாழ்த்திடின்
மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவிர்த் தன்னையின் சின்மயப் புன்னகை
சிந்தையில் ஏற்றவனே
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (1)

வாழ்வினில் வளந்தர வையகம் நடந்தான்
வாரியே வழங்கிடுவான்
தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள் மறைந்திடு
தானென வந்திடுவான்
காழ்ப்புகள் தீர்த்தான் கானகம் நின்றான்
காவலாய் வந்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநில வதனில் முறையொடு பூஜைகள்
முடித்திட அருளியிடுவான்
உழுதவன் விதைப்பான் உடமைகள் காப்பான்
உயர்வுறச் செய்திடுவான்
முழுமலர்த் தாமரை மாலையை ஜெபித்து
முடியினில் சூடிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (3)

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான்
நான்முகன் நானென்பான்
தேனினில் பழத்தைச் சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான்
வான்மழை எனவே வளங்களைப் பொழிவான்
வாழ்த்திட வாழ்த்திடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (4)

பூதங்கள் யாவும் தனக்குள்ளே வைப்பான்
பூரணன் நான் என்பான்
நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான்
காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழில்களில் மணப்பான் பூசைகள் ஏற்பான்
பொன்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி
கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும்
நின்மலன் நானென்பான்
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான் (6)

சதுர்முகன் ஆணவத் தலையினைக் கொய்தான்
சத்தொடு சித்தானான்
புதரினில் பாம்பைத் தலையினில் வைத்தான்
புண்ணியம் செய்யென்றான்
பதரினைக் குவித்து செம்பினை எரித்தான்
பசும்பொன் இதுவென்றான்
தனக்கிலை யீடு யாரும் என்பான்
தனமழை பெய்திடுவான் (7)

ஜெய ஜெய வடுக நாதனே சரணம்
வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய க்ஷேத்திர பாலனே சரணம்
ஜெயங்களைத் தந்திடுவாய்
ஜெயஜெய வயிரவா செகம் புகழ் தேவா
செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கிலை யீடு யாரும் என்பான்
தனமழை பெய்திடுவான் (8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்த காரியம் சித்தியடைய கால பைரவாஷ்டகம்

1. தேவராஜஸேவ்யமான பாவனாங்க்ரி பங்கஜம்
வ்யால யக்ஞஸூத்ர மிந்து சேகரம் க்ருபாகரம்
நாரதாதியோகி ப்ருந்த வந்திதம் திகம்பரம்
காசிகா புராதிநாத கால பைரவம் பஜே

2. பானுகோடி பாஸ்வரம் பவாப்தி கார கம்பரம்
நீலகண்டமீப் ஸிதார்த்த தாயகம் த்ரிலோசனம்
கால கால மம்புஜாக்ஷமக்ஷ சூல மக்ஷரம்
காசிகா புராதிநாத கால பைரவம் பஜே.

3. சூலடங்க பாசதண்டபாணி மாதிகாரணம்
ச்யாமாகாயம் ஆதிதேவ மக்ஷரம் நிராமயம்
பீம விக்ரமம் ப்ரபும் விசித்ர தாண்டவ ப்ரியம்
காசிகா புராதிநாத கால பைரவம் பஜே

4. புக்தி முக்தி தாயகம் ப்ரசஸ் தசாரு விக்ரஹம்
பக்த வத்ஸலம் ஸ்திரம் ஸமஸ்தலோக விக்ரஹம் நிக்வணன்
மனோக்ஞ ஹேம கிங்கிணீ லஸத்கடிம்
காசிகா புராதி நாத காலபைரவம் பஜே

5. தர்மஸேது பாலகம் த்வதர்மமார்க நாசகம்
கர்ம பாக மோசகம் ஸூசர்மதாயகம் விபும்
ஸ்வர்ணவர்ண தேசபாசசோ பிதாங்க நிர்மலம்
காசிகா புராதிநாத காலபைரவம் பஜே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ரத்ன பாதுகா ப்ரபா பிராமபாத யுக்மகம்
நித்ய மத்விதீய மிஷ்ட தைவதம் நிரஞ்ஜனம்
ம்ருத்யுதர்ப நாச நம் கராலதம்ஷ்ட்ர பூஷணம்
காசிகாபுராதி நாத கால பைரவம் பஜே

7. அட்டாஹாச பின்ன பத்ம ஜாண்ட கோச ஸந்ததிம்
த்ருஷ்டிபாத நஷ்டபாப ஜாலம் உக்ர சாஸநம்
அஷ்டஸித்தி தாயகம் கபால மாலிகாதரம்
காசிகா புராதிநாத கால பைரவம் பஜே

8. பூதஸங்க நாயகம் விசாலகீர்த்தி தாயகம்
காசிவாசி லோகபுண்ய பாப சோதகம் விபும்
நீதிமார்க கோவிதம் புராதநம் ஜகத் பதிம்
காசிகா புராதிநாத கால பைரவம் பஜே

9. கால பைரவாஷ்டகம் படந்தியே மனோஹரம்
க்ஞான முக்தி ஸாதகம் விசித்ர புண்ய வர்த்தனம்
லோக மோஹலோப தைனய கோபதாப நாசநம்
தே ப்ரயாந்தி கால பைரவாங்க்ரி ஸந்நிதிம் த்ருவம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ மந்திரங்கள்

1. ஸ்ரீ கபால பைரவரின் காயத்ரீ
ஓம் கால தண்டாய வித்மஹே
வஜ்ரவீராய தீமஹி
தந்நோ: கபால பைரவ ப்ரசோதயாத்

ஸ்ரீ இந்திராணி காயத்ரீ
ஓம் கஜத் வஜாயை வித்மஹே
வஜ்ர ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: இந்த்ராணீ ப்ரசோதயாத்

2. ஸ்ரீ சண்ட பைரவரின் காயத்ரீ
ஓம் சர்வ சத்ரு நாஸாய வித்மஹே
மஹா வீராய தீமஹி
தந்நோ: சண்ட பைரவ ப்ரசோதயாத்

ஸ்ரீ கௌமாரி காயத்ரீ
ஓம் சிகித் வஜாயை வித்மஹே
வஜ்ர ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: கௌமாரீ ப்ரசோதயாத்

3. ஸ்ரீ உன்மத்த பைரவரின் காயத்ரீ
ஓம் மஹா மந்த்ராய வித்மஹே
வராஹி மனோகராய தீமஹி
தந்நோ: உன்மத்த பைரவ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வராஹி காயத்ரீ
ஓம் மஹிஷத் வஜாயை வித்மஹே
தண்ட ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: வராஹி ப்ரசோதயாத்

4. ஸ்ரீ அசிதாங்க பைரவரின் காயத்ரீ
ஓம் ஞான தேவாய வித்மஹே
வித்யா ராஜாய தீமஹி
தந்நோ: அசிதாங்க பைரவ ப்ரசோதயாத்

ஸ்ரீ பிராம்ஹி தேவியின் காயத்ரீ
ஓம் ஹம்ஸத் வஜாயை வித்மஹே
கூர்ச்ச ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: பிராம்மீ ப்ரசோதயாத்

5. ஸ்ரீ ருரு பைரவர் காயத்ரீ
ஓம் ஆனந்த ரூபாய வித்மஹே
டங்கேஷாய தீமஹி
தந்நோ: ருரு பைரவ ப்ரசோதயாத்

ஸ்ரீ மாஹேச்வரீ காயத்ரீ
ஓம் வ்ருஷத் வஜாயை வித்மஹே
ம்ருக ஹஸ்தாயை தீமஹி
தந்நோ: ரௌத்ரீ ப்ரசோதயாத்

6. ஸ்ரீ குரோதன பைரவர் காயத்ரீ
ஓம் கிருஷ்ண வர்ணாய வித்மஹே
லட்சுமி தராய தீமஹி
தந்நோ: குரோதன பைரவ ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வைஷ்ணவி காயத்ரீ

ஓம் தாக்ஷ்யத் வஜாயை வித்மஹே

சக்ர ஹஸ்தாயை தீமஹீ

தந்நோ: வைஷ்ணவி ப்ரசோதயாத்

7. ஸ்ரீ ஸம்ஹார பைரவர் காயத்ரீ

ஓம் மங்களேஷாய வித்மஹே

சண்டிகாப்ரியாய தீமஹி

தந்நோ: ஸம்ஹார பைரவ ப்ரசோதயாத்

ஸ்ரீ சண்டீ காயத்ரீ

ஓம் சண்டீசுவரி ச வித்மஹே

மஹா தேவிச ச தீமஹி

தந்நோ: சண்டீ ப்ரசோதயாத்

8. ஸ்ரீ பீஷண பைரவர் காயத்ரீ

ஓம் சூல ஹஸ்தாய வித்மஹே

ஸர்வானுக்ராய தீமஹி

தந்நோ: பீஷண் பைரவப் ப்ரசோதயாத்

ஸ்ரீ சாமுண்டி காயத்ரீ

ஓம் பிசாசத் வஜாயை வித்மஹே

சூல ஹஸ்தாயை தீமஹி

தந்நோ: காளி ப்ரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறுபத்துநான்கு வைரவர்களும் அவர்களின் தேவியரான அறுபத்து நான்கு யோகினிகளும்**

| | | |
|---|---|---|
| 1. அசிதாங்கர் | – | திவ்யயோகி |
| 2. மார்த்தாண்டர் | – | சித்தயோகி |
| 3. சுவச்சந்தர் | – | பிரேதாசி பிகினி |
| 4. கேசரர் | – | நிசாசரி |
| 5. ருரு | – | ஊர்த்துவ வேதாளி |
| 6. சடாதரர் | – | பூதடாமரி |
| 7. விருபாட்சர் | – | விருபாக்ஷி |
| 8. பரர் | – | நரபோஜனி |
| 9. மகாகாயர் | – | கோரரக்தாட்சி |
| 10. பிரளயாந்தகர் | – | பயங்கரி |
| 11. நீலகண்டர் | – | கீசண்டி (நீலகண்டி) |
| 12. குலபாலகர் | – | முண்டதாரிணி |
| 13. காமபாலர் | – | ருத்ரவேதாளி |
| 14. பிங்கலேட்சணர் | – | திரிபுராந்தகி |
| 15. தராபாலர் | – | துவம்சனி |
| 16. மந்திர நாயகர் | – | துர்முகி |
| 17. பிதாமகர் | – | கட்வாங்கி |
| 18. வடுகர் | – | மாலினி |
| 19. பூதவேதாளதிரிநேத்ரர் | – | காலாக்னி |
| 20. வரதர் | – | சக்ரி |
| 21. கபாலர் | – | புவனேஸ்வரி |
| 22. ஹஸ்திசர்மாம்பரதரர் | – | வீரபத்ரேசி |
| 23. பிரம்மராட்சர் | – | கலகப்பிரியா |
| 24. சர்வதேவேசர் | – | நாடகி |
| 25. பீஷ்ணாக்யர் | – | யமதூதி |
| 26. சர்வக்ஞயர் | – | கௌசகி |
| 27. விசாலாட்சர் | – | மகாயோகி |
| 28. மோதகப்பிரியர் | – | கணேசுவரி |
| 29. குரோதம்ஷ்ட்ரர் | – | பிசாசி |
| 30. ஸசராசர் | – | ஜங்காரி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 31. விகவரூபர் | – | ஊர்த்தவகேசி |
| 32. நாதாருபதரர் | – | சுஷ்காங்கி |
| 33. ஜ்ரஹஸ்தவர் | – | ராகஷசி |
| 34. சண்டர் | – | விஸ்வரூபி |
| 35. பூமிகம்பர் | – | வீரகௌமாரி |
| 36. விஷ்ணு | – | வராகி |
| 37. முண்டபாலர் | – | பிராமரி |
| 38. குரோதர் | – | பீஷ்கரி |
| 39. அப்ரரூபர் | – | பைரவி |
| 40. குடிலர் | – | குரோதி |
| 41. ருத்ரர் | – | பிரேதவாகினி |
| 42. உந்மத்தர் | – | தீர்கலம் போஷ்டி |
| 43. சங்கரர் | – | மந்திரயோகினி |
| 44. திரிபுராந்தகர் | – | கிராமணி |
| 45. பர்வதராசர் | – | கங்காளி |
| 46. சசிபூஷணர் | – | பட்காரி |
| 47. யோகீசர் | – | தும்ராகூஷி |
| 48. சர்வக்ஞர் | – | கண்டகி |
| 49. சர்வபூதஹ்ருதிஸ்திதர் | – | மாரி |
| 50. பயகரர் | – | கராளினி |
| 51. காலாக்னி | – | மர்த்தனி |
| 52. மகாரௌத்ரர் | – | யகூஷி |
| 53. முகரோஸ்திரர் | – | பிரஹரிணி |
| 54. அதிரிக்தர் | – | காமலோலா |
| 55. காலாக்னி | – | அதோமுகி |
| 56. கோரநாதர் | – | விகடி |
| 57. யோகீசர் | – | கபாலி |
| 58. விக்ன சந்துஷ்டா | – | காளாராத்திரி |
| 59. தட்சிணா | – | ரோமஜங்கி |
| 60. சம்ஹாரர் | – | சகஸ்ராகூஷி |
| 61. அங்கர் | – | காகதமிஷ்டரி |
| 62. பிரியங்கரர் | – | துர்ச்சடி |
| 63. விசாலாட்சர் | – | கேசி |
| 64. தட்சசம்ஸ்திதா | – | விஷலங்கிணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காலபைரவர் 108 போற்றி

ஓம் பைரவனே போற்றி
ஓம் பயநாசகனே போற்றி
ஓம் அஷ்டரூபனே போற்றி
ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
ஓம் அயன்குருவே போற்றி
ஓம் அறக்காவலனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அடங்காரின் அழிவே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அசிதாங்க பைரவனே போற்றி
ஓம் ஆனந்த பைரவனே போற்றி
ஓம் ஆலயக் காவலனே போற்றி
ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
ஓம் இடுகாட்டு இருப்பவனே போற்றி
ஓம் உக்ரபைரவனே போற்றி
ஓம் உடுக்கையேந்தியவனே போற்றி
ஓம் உதிரங்குடித்தவனே போற்றி
ஓம் உன்மத்த பைரவனே போற்றி
ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
ஓம் ஊழித்தருள்வோனே போற்றி
ஓம் எல்லைத்தேவனே போற்றி
ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
ஓம் கபாலதாரியே போற்றி
ஓம் கங்காளமூர்த்தியே போற்றி
ஓம் கர்வபங்கனே போற்றி
ஓம் கல்பாந்தபைரவனே போற்றி
ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல்வீசுங்கண்ணனே போற்றி
ஓம் கருமேகநிறனே போற்றி
ஓம் கட்வாங்கதாரியே போற்றி
ஓம் களவைக்குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி
ஓம் காலபைரவனே போற்றி
ஓம் காபாலிகர்தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில்பிறந்தவனே போற்றி


ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல் தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி
ஓம் சண்ட பைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சம்ஹாரகால பைரவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்திருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீகாழித்தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி
ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினையறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் க்ஷேத்ரபாலனே போற்றி
ஓம் தனிச்சன்னதியுளானே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீதழிப்பவனே போற்றி
ஓம் துஸ்வப்னநாசகனே போற்றி
ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரஸ ரூபனே போற்றி
ஓம் நரசிம்மரூபனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி
ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி
ஓம் பயங்கர ஆயுதனே போற்றி
ஓம் பகையழிப்பவனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பலிபீடத்துறைவோனே போற்றி
ஓம் பாபபக்ஷயனே போற்றி
ஓம் பாசம் குலைப்போனே போற்றி
ஓம் பால பைரவனே போற்றி
ஓம் பாம்பணியனே போற்றி
ஓம் பிரளயகாலனே போற்றி
ஓம் பிரம்மசிரத்சேதனே போற்றி
ஓம் பூஷண பைரவனே போற்றி
ஓம் பூதப்ரேதநாதனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பைராகியர் நாதனே போற்றி
ஓம் மல நாசகனே போற்றி
ஓம் மஹா பைரவனே போற்றி

ஓம் மணிஞானனே போற்
ஓம் மகர குண்டலனே போற்ற
ஓம் மகோதரனே போற்றி
ஓம் மார்த்தாண்டபைரவனே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் முனீஸ்வரனே போற்றி
ஓம் மூலமூர்த்தியே போற்றி
ஓம் யமவாதனை
நீக்குபவனே போற்றி
ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி
ஓம் ருத்ரனே போற்றி
ஓம் ருத்ராக்ஷதாரியே போற்றி
ஓம் வடுக பைரவனே போற்றி
ஓம் வடுகூர்நாதனே போற்றி
ஓம் வடகிழக்கருள்வோனே போற்றி
ஓம் வடைமாலைப்பிரியனே போற்றி
ஓம் வாரணாசி வேந்தே போற்றி
ஓம் வாமனர்க்கருளியவனே போற்றி
ஓம் விபீஷண பைரவனே போற்றி
ஓம் விழாமல் காப்பவனே போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பைரவர் அஷ்டோத்தர சத நாமாவளி

| | | | |
|---|---|---|---|
| ஓம் பைரவாய | நமஹ | ஓம் கட்கபாணயே | நமஹ |
| ஓம் பூதநாதாய | நமஹ | ஓம் கங்காளிநே | நமஹ |
| ஓம் பூதாத்மனே | நமஹ | ஓம் தூம்ரலோசனாய | நமஹ |
| ஓம் பூததபாவநாய | நமஹ | ஓம் அபீரவே | நமஹ |
| ஓம் க்ஷேத்ரதாய | நமஹ | ஓம் பைரவாய | நமஹ |
| ஓம் க்ஷேத்ர பாலாய | நமஹ | ஓம் நாதாய | நமஹ |
| ஓம் க்ஷேத்ரக்ஞாய | நமஹ | ஓம் பூதபாய | நமஹ |
| ஓம் க்ஷத்ரியாய | நமஹ | ஓம் யோகிநீபதயே | நமஹ |
| ஓம் விராஜே | நமஹ | ஓம் தநதாய | நமஹ |
| ஓம் ஸ்மசானவாசினே | நமஹ | ஓம் தநஹாரிணே | நமஹ |
| ஓம் மாம்ஸாசிநே | நமஹ | ஓம் தநவதே | நமஹ |
| ஓம் ஸர்ப்பராசயே | நமஹ | ஓம் ப்ரீதிபாவனாய | நமஹ |
| ஓம் ஸ்மராந்தக்ருதே | நமஹ | ஓம் நாகஹாராய | நமஹ |
| ஓம் ரக்தபாய | நமஹ | ஓம் நாகபாசாய | நமஹ |
| ஓம் பானபாய | நமஹ | ஓம் வ்யோம கேசாய | நமஹ |
| ஓம் ஸித்தாய | நமஹ | ஓம் கபால ப்ருதே | நமஹ |
| ஓம் ஸித்திதாய | நமஹ | ஓம் காலாய | நமஹ |
| ஓம் ஸித்தஸேவிதாய | நமஹ | ஓம் கபால மாலிநே | நமஹ |
| ஓம் கங்காளாய | நமஹ | ஓம் கமநீயாய | நமஹ |
| ஓம் காலசமனாய | நமஹ | ஓம் கலாநிதயே. | நமஹ |
| ஓம் கலாய | நமஹ | ஓம் த்ரிலோசனாய | நமஹ |
| ஓம் காஷ்டாய | நமஹ | ஓம் ஜ்வலந் நேத்ராய | நமஹ |
| ஓம் தநவே | நமஹ. | ஓம் த்ரிசிகிநே | நமஹ |
| ஓம் கவயே | நமஹ | ஓம் த்ரிலோகபாய | நமஹ |
| ஓம் த்ரிநேத்ரே | நமஹ | ஓம் த்ரிநேத்ரதநயாய | நமஹ |
| ஓம் பஹுநேத்ரே | நமஹ | ஓம் டிம்பாய | நமஹ |
| ஓம் பிங்களலோசனாய | நமஹ | ஓம் சாந்தாய | நமஹ |
| ஓம் சூலபாணயே | நமஹ | ஓம் சாந்த ஜனப்ரியாய | நமஹ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வடுகாய நமஹ
ஓம் வடுவேஷாய நமஹ
ஓம் கட்வாங்கவரதாரகாய நமஹ
ஓம் பூதாத்யஷாய நமஹ
ஓம் பசுபதயே நமஹ
ஓம் பிக்ஷுதாய நமஹ
ஓம் பரிசாரகாய நமஹ
ஓம் தூர்தாய நமஹ
ஓம் திகம்பராய நமஹ
ஓம் சூராய நமஹ
ஓம் ஹரிணாய நமஹ
ஓம் பாண்டுலோசனாய நமஹ
ஓம் ப்ரசாந்தாய நமஹ
ஓம் சாந்திதாய நமஹ
ஓம் ஸித்தாய நமஹ
ஓம் சங்கராய நமஹ
ஓம் ப்ரியபாந்தவாய நமஹ
ஓம் அஷ்டமூர்த்தயே நமஹ
ஓம் நிதீசாய நமஹ
ஓம் க்ஞான சுக்ஷுஷே நமஹ
ஓம் தபோமயாய நமஹ
ஓம் அஷ்டாதாராய நமஹ
ஓம் ஷடாதாராய நமஹ
ஓம் ஸர்ப்பயுக்தாய நமஹ
ஓம் சிகீஸகாய நமஹ
ஓம் பூதராய நமஹ
ஓம் பூதராதீசாய நமஹ
ஓம் பூபதயே நமஹ
ஓம் பூதராத்மஜாய நமஹ
ஓம் கங்காலதாரிணே நமஹ
ஓம் முண்டிநே நமஹ
ஓம் நாகயக்ஞோப வீதவதே நமஹ
ஓம் ஜ்ரும்பணோ மோஹந
ஸ்தம்பீராண க்ஷோபணாய நமஹ
ஓம் ஸுத்த நீலாஞ்சன
ப்ரக்யாய நமஹ
ஓம் நைத்யக்நே நமஹ
ஓம் முண்ட பூஷிதாய நமஹ
ஓம் பலிபுஜே நமஹ
ஓம் பலிபுங் நாதாய நமஹ
ஓம் பாலாய நமஹ
ஓம் அபால விக்ரமாய நமஹ
ஓம் ஸர்வாபத்தாரணாய நமஹ
ஓம் தூர்க்காய நமஹ
ஓம் துஷ்டபூத நிஷேவிதாய நமஹ
ஓம் காமிநே நமஹ
ஓம் கலாநிதயே நமஹ
ஓம் காந்தாய நமஹ
ஓம் காமிநீ வசக்ருதே நமஹ
ஓம் வசிநே நமஹ
ஓம் ஸர்வ சித்திப்ரதாய நமஹ
ஓம் வைத்யாய நமஹ
ஓம் ப்ரபவே நமஹ
ஓம் விஷ்ணவே நமஹ

நாதாவித பரிமள மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந் பிறின்டேர்ஸ், பண்ணாலை. 0771857919

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org